IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.200/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | ARULNITHI |
| HUSBAND'S NAME | : | JOHN PENNICK |
| VILLAGE | : | BRAMMAPURAM |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். எங்களுக்கு சொந்தமான பிரம்மபுரத்தில் உள்ள வீட்டை இடித்து கட்டுவதற்காக சர்வரை வைத்து அளந்து அத்து பிரித்து கல்லை நட்டு கம்பி நட்டேன். 07.05.2025 ம் தேதி மாலை 5 மணியளவில் அளந்தோம். பின்னர் அன்றைய தினமே மாலை 5 மணியளவில் ஆஜர் எதிரியான அருள்ஜோதி என்பவர் மற்றும்அவரது தங்கைகளான அருட்செல்வி, அருள்மொழி மற்றும் உறவினர்கள் வந்து எங்கள் வீட்டிற்கு வந்து நில பிரச்சினை சம்மந்தமாக தகராறு செய்தார்கள். பின்னர் அக்கம் பக்கம் இருந்தவர்கள் சண்டையை சமாதானம் செய்தார்கள். மறுநாள் 08.05.2025 ம் தேதி காலை 8 மணியளவில் நாங்கள் சர்வேயரை வைத்து அளந்து கல்போட்டிருந்த நிலத்தை எதிரி அருள்ஜோதி என்பவர் கல்லையும், கம்பியையும் பிடுங்கி எரிந்தார். ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். எதிரியை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அப்போது ஆஜர் எதிரி அருள்ஜோதி என்னை பார்த்து தேவிடியா, தாசி என திட்டினார். அந்த கம்பியால் என் வயிற்றில் குத்த முயன்றார். அதை நான் என் வலது கையால் தடுத்தேன். அதில் எனக்கு வலது கை புஜத்தில் காயம் ஏற்பட்டது. இடது கையில் வீக்கம் ஏற்பட்டது. பின்னர் அதன்பிறகு அருள்மொழி என்பவர் என்னை முடியை பிடித்து அடித்தார். அருட்செல்வி என்பவர் என்னை வயிற்றின் மீது காலால் எட்டி உதைத்தார். எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். சம்பவத்தை என்னுடைய மாமனார் வில்சன் நேரடியாக பார்த்தார். காயம்பட்ட நான் வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து ராணிப்பேட்டை மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு

என்னுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் கம்பியால் தான் என்னை அடித்தார்கள். அந்த கம்பி **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.200/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | JOHN BENNY |
| FATHER'S NAME | : | WILSON |
| VILLAGE | : | BRAMMAPURAM |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். நடத்துநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். என் மனைவி. வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 07.05.2025 ம் தேதி மாலை 5 மணியளவில் அளந்தோம். பின்னர் அன்றைய தினமே மாலை 5 மணியளவில் ஆஜர் எதிரியான அருள்ஜோதி என்பவர் மற்றும்அவரது தங்கைகளான அருட்செல்வி, அருள்மொழி மற்றும் உறவினர்கள் வந்து எங்கள் வீட்டிற்கு வந்து நில பிரச்சினை சம்மந்தமாக தகராறு செய்தார்கள். பின்னர் அக்கம் பக்கம் இருந்தவர்கள் சண்டையை சமாதானம் செய்தார்கள். மறுநாள் 08.05.2025 ம் தேதி சுமார் காலை 07.30 மணிமுதல் 8 மணி வரை என் மனைவி அருள்நிதி வீட்டில் இருக்கும்போது எதிரி அருள்ஜோதி என்பவர் நாங்கள் அளந்து கல்லு மற்றும் கம்பி நட்டு வைத்துகம்பியை பிடுங்கி போட்டுள்ளார். அப்போது என்னுடைய மனைவி அருள்நிதி என்பவர் சென்று அருள்ஜோதியை பார்த்து ஏன் கம்பியை பிடுங்கினீர்கள் என்று கேட்டுள்ளார். அப்போது என் மனைவியை பார்த்து தேவிடியா, தாசி என அருள்ஜோதி திட்டினார். ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் உள்ளார். அப்போது எதிரி என் மனைவியை கம்பியால் குத்த வந்துள்ளார். அதை என் மனைவி தடுத்தபோது அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் எதிரியின் தங்கைகள் அருள்மொழி, அருட்செல்வி என்பவரும் என் மனைவியை பார்த்து தேவிடியா, தாசி என திட்டி தலைமுடியை பிடித்து கீழே தள்ளி காலாலும், கையாலும் அடித்ததாக சொன்னார். சம்பவம் அறிந்து உடனடியாக நான் என்னுடைய வீட்டிற்கு சென்றேன். அங்கு என் மனைவி இல்லை. பின்னர் அங்கிருந்து காவல் நிலையம் சென்று அங்கிருந்து வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக ராணிப்பேட்டை சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு என் மனைவி 8 நாட்கள்

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். சம்பவம் தொடர்பாக என் மனைவி புகார் மனு கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.200/2025

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | WILSON |
| FATHER'S NAME | : | ANANDHARAJ |
| VILLAGE | : | BRAMMAPURAM |
| OCCUPATION | : | PAINTER |
| AGE | : | 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 29th day of JULY 2026.

<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். 07.05.2025 ம் தேதி பிரம்மபுரம் சர்ச் அருகே உள்ள எங்களுக்கு சொந்தமான மனையை சுத்தம் செய்து அளந்து கல் மற்றும் கம்பி நட்டோம். பின்னர் மறுநாள் 08.05.2025 ம் தேதி காலையில் நான் எங்களுக்கு சொந்தமான இடத்திற்கு சென்றேன். அப்போது நேரம் காலை 8 மணி இருக்கும். என்னுடைய ்மருமகளை எதிரிகள் அருள்மொழியும், அருட்செல்வியும் கையால் அடித்தார்கள். நான் நேரடியாக பார்த்தேன். அருள்ஜோதி என்பவர் என் மருமகளை கம்பியால் அடித்தார். ஆஜர் எதிரிகள் அனைவரையும் சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அப்போது எதிரிகள் என் மருமகளின் முடியை பிடித்தார்கள். பின்னர் நான் அங்கு சென்று என் மருமகளை மீட்டு வீட்டிற்கு அழைத்து வந்தேன். பின்னர் அங்கிருந்து பிரம்மபுரம் காவல் நிலையம் சென்றோம். அவர்கள் எங்களை காட்பாடி காவல் நிலையம் அனுப்பி வைத்தார்கள். பின்னர் என்னுடைய மருமகளை வேலூர் சிஎம்சி மருத்துவமனை அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக ராணிப்பேட்டை சிஎம்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 29.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.07.29 19:41:44 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.